# யாழ்ப்பாண அரசுகாலத்தில் முன்னெடுக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் ஓர் வரலாற்றுப்பார்வை

க. ஜெயதீஸ்வரன்[@]

Correspondence: jeyathe@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் வடபகுதியில் கி.பி 13 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றிருந்த அரசாக யாழ்ப்பாண அரசு அடையாளங்காணப்பட்டுள்ளது. இவ்வரசானது தோற்றம் பெற்ற காலம் முதல் கி.பி 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வீழ்ச்சியடையும் வரை அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலைகளில் சிறந்து விளங்கியிருந்தது. இந்தவகையில் இவ்வரசு பொருளாதார நிலை பொறுத்துச் சிறந்து விளங்குவதற்கு இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த வர்த்தக நடவடிக்கைகள் ஓர் காரணமாக விளங்கியிருந்தது. குறிப்பாக யாழ்ப்பாண அரசர்கள் இப்பகுதியின் வளங்கள், உற்பத்திகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சிறந்த பொருளாதாரக் கொள்கையை வகுத்து வர்த்தக நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ள வழியமைத்திருந்தனர். இவர்களது பொருளாதாரக் கொள்கைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு இப்பகுதியின் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுவந்த வர்த்தக நடவடிக்கைகளை அரசின் ஏகபோக உரிமையின் அடிப்படையில் மேற்கொண்டு வந்தமையாகும். இவ்வாறு சிறந்தவகையில் முன்னெடுக்கப்பட்டு வந்த வர்த்தக நடவடிக்கையானது உள்நாட்டிற்குள்ளும், வெளிநாடுகளுடனும் இடம் பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது. உள்நாட்டு வர்த்தக நடவடிக்கை யாழ்ப்பாண இராச்சியத்திற்குள்ளும், கண்டி இராச்சியத்துடனும் தரை மற்றும் கடல் வழியாகவும், வெளிநாட்டு வர்த்தகம் தென்னிந்தியா, சீனா, யாவா, பாரசீகம், கிரேக்க மற்றும் உரோம நாடுகளுடன் கடல்வழியாக இடம்பெற்று வந்தது. இவ் வெளிநாட்டு வர்த்தகம் வடபகுதித் துறைமுகங்களான மாதோட்டம், அரிப்பு, மன்னார், கச்சாய், கொழும்புத்துறை, பருத்தித்துறை, காங்கேசன்துறை, ஊர்காவற்துறை ஆகியவற்றினூடாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளூடாக யாழ்ப்பாண அரசு பொருளாதாரரீதியாக சிறந்த நிலையை அடைந்திருந்ததுடன் சர்வதேச அளவில் புகழ் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண அரசர் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக வரலாற்று நோக்கில் ஆய்வு செய்வதாக இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளதுடன் இலக்கிய மற்றும் தொல்லியல் ஆதாரங்களையும் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்கட்டுரை யாழ்ப்பாண அரசர் காலத்திற்கு முன்பான வட இலங்கையின் வர்த்தக நடவடிக்கை தொடர்பாகவும் யாழ்ப்பாண அரசர்கலாத்தில் நடைபெற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கை தொடர்பாகவும் ஆய்வுசெய்கின்றது.

**பிரதான சொற்கள்:** அரசு, ஏற்றுமதி, துறைமுகம்

## ஆய்வு அறிமுகம்:-

மத்தியகால இலங்கை வரலாற்றில் வடபகுதியில் தோற்றம்பெற்றிருந்த ஓர் அரசாக யாழ்ப்பாண அரசு அடையாளங்காணப்பட்டுள்ளது. இவ்வரசின் தோற்றம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்தாலும் இவ்வரசு கி.பி 13 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றிருந்ததென்பது இன்றுவரை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவாக உள்ளது. இவ்வரசு ஆரியச்சக்கரவர்த்திகள் என்போரால் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு நிறுவப்பட்டிருந்ததுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டை மையப்படுத்தியவகையில் தோற்றம் பெற்றிருந்ததனால் யாழ்ப்பாண அரசு என்ற பெயரைப் பெற்றிருந்தது. இவ்வரசு யாழ்ப்பாணக் குடாநாட்டையும் அதனைச் சுற்றியிருந்த தீவுகளையும், வன்னியின் சில பகுதிகளையும், மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கியவகையில் யாழ்ப்பாண இராச்சியமாகத் திகழ்ந்தது. இவ்வாறு விளங்கிய இவ்வரசு கி.பி 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வீழ்ச்சியடையும்வரை அரசியல், பொருளாதார, சமய, சமூக, பண்பாட்டுத் துறைகளில் பெருவளர்ச்சி பெற்றிருந்ததை இலக்கிய மற்றும் தொல்லியல் ஆதாரங்களின் மூலம் அறியமுடிகின்றது. இவ்வரசின் எழுச்சிக்குப் பல்வேறு காரணங்கள் பின்னணியாக விளங்கியவகையில் அவற்றில் ஒன்றாக பொருளாதாரக் காரணிகளும் விளங்கியிருந்தன. பொதுவாக எந்த ஒரு அரசின் எழுச்சிக்கும் பொருளாதாரம் அடித்தளமாக விளங்குவது முக்கியம் என்றவகையில் யாழ்ப்பாண அரசின் எழுச்சிக்கும் பொருளாதாரம் அடித்தளமாக விளங்கியிருந்தது.

குறிப்பாக யாழ்ப்பாண அரசின் பொருளாதாரத்தில் இயற்கை வளங்களான முத்து, யானைகள், சாயவேர் ஆகியவை முக்கிய இடம் பெற்றிருந்ததுடன் உள்ளூர் உற்பத்திகளும் இடம்பிடித்திருந்தன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வந்த வர்த்தக நடவடிக்கை அரசிற்கு பெருமளவு வருமானத்தைப் பெற்றுக்கொடுத்து அரசு சிறப்புநிலை அடைவதற்கும் வழியமைத்துக் கொடுத்தது. இவ்வாறு காணப்பட்ட பொருளாதார வளங்களை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டிற்குள்ளும், வெளிநாடுகளுடனும் வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவற்றுள் உள்நாட்டிற்குள் முன்னெடுக்கப்பட்டுவந்த வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவிற்கு தென்னிலங்கை மற்றும் வன்னிப்பகுதிகளுடனும், வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கை தென்னிந்தியா, சீனா, யாவா, பாரசீகம், கிரேக்க மற்றும் உரோம நாடுகளுடன் இடம்பெற்று வந்தது. இவ்வாறான வர்த்தக நடவடிக்கையில் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் தரைவழியாக கடவைகளுடாகவும் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் வடபகுதியில் காணப்பட்ட துறைமுகங்கள் ஊடாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் யாழ்ப்பாண அரசு பொருளாதாரரீதியாக எழுச்சியடைவதற்கு வித்திட்டிருந்ததுடன் யாழ்ப்பாண அரசின் புகழ் சர்வதேச அளவில் பரவவும் வழிவகுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஆய்வு முறையியல்

முதலாம், இரண்டாம்தரத் தரவுகளை ஆதாரமாகக் கொண்டு பொருளாதார மற்றும் வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. முதலாம்தரத் தரவுகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாண அரசுகாலம் தொடர்பாக எழுந்த மூல இலக்கியங்களான யாழ்ப்பாணவைபவமாலை, செகராசசேகரமாலை, வையாபாடல் ஆகியவையும் பாளி மற்றும் சிங்கள இலக்கியங்களான சூளவம்சம், குருநாகலவிஸ்தரய, இராஜாவலிய, போன்றவையும் தொல்லியல் ஆதாரங்களான கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்பனவும் பயன்படுத்ததப்படுகின்றன. இரண்டாம் தரத் தரவுகளாக முதலாம்தரத் தரவுகளைப் பயன்படுத்தி பிற்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள் இவ்விடயம் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்ட ஆய்வாளர்களுடனான நேர்காணல்கள் என்பன இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## யாழ்ப்பாண அரசுகாலத்திற்கு முன் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள்

வட பகுதியில் யாழ்ப்பாண அரசு கி.பி 13 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றிருந்தாலும் இப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலப்பகுதியிலிருந்து ஆரம்பித்திருந்ததென அண்மைக்கால ஆய்வுகள் நிரூபித்திருக்கின்ற வகையில் இக்காலம் முதலே இப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்ததை தொல்லியற் சான்றுகள் மூலமாக அறியமுடிகின்றது. இந்தவகையில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய காலமான வரலாற்றிற்கு முற்பட்ட காலம் முதல் இப்பகுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் இடம் பெற்று வந்ததையும் இப்பின்னணியில் அவ்வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவந்த மையங்கள் நகரமயமாக்கத்திற்கு உட்பட்டு சிறந்த நகரங்களாக புராதன காலத்தில் எழுச்சி கண்டிருந்தன. வட பகுதியில் இவ்வாறு எழுச்சிகண்ட நகரங்களாக மாந்தை, கந்தரோடை, பூனகரி, யாழ்ப்பாணக் கோட்டை அமைந்துள்ள பகுதி ஆகியவை விளங்கின(புஷ்பரட்ணம்,2017,ப.54). இப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது சேகரிக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்கள், மட்பாண்டச் சிதைவுகள் ஆகியவை இவற்றிற்கு ஆதாரமாக விளங்குகின்றன. இவ்வாதாரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் வரலாற்றிற்கு முற்பட்ட காலம் முதல் மேற்கொள்ளப்பட்டு வந்ததைக் காண முடிகின்றது.

வட பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த வர்த்தக நடவடிக்கைகளில் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக முதலில் நோக்கும்போது புராதன காலம் முதல் இந்நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டு வந்ததை புராதன காலக் குடியிருப்பு மையங்களாக அடையாளங் காணப்பட்ட கந்தரோடை, வல்லிபுரம், குடத்தனை, வேலனை, நெடுந்தீவு, பூனகரி, மாந்தை, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் கிடைக்கப்பட்ட அச்சுக்குத்திய நாணயங்களும், இலக்குமி நாணயங்களும் சான்றாக அமைகின்றன(சிற்றம்பலம்,1993,ப,494). இந்நாணயங்கள் சுதேச நாணயங்களாகக் காணப்படுவதனால் இந்நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டுமென கூறமுடியும். அடுத்து இப்பகுதியில் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கை புராதன காலத்தில் முன்னெடுக்கப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுவதாக வவுனியா பெரியபுளியங்குளக் கல்வெட்டு விளங்குகின்றது. கி.மு 3ஆம் அல்லது 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் காணப்படும் இக்கல்வெட்டில் தமிழ்வணிக கணத்தினர் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்ததை அறியமுடிகின்றது(இந்திரபாலா,2006,ப,173.). இக்கல்வெட்டின் அடிப்படையில் தமிழர்கள் இப்பகுதிகளில் அதிகம் வாழ்ந்துவந்ததனால் இப்பகுதியின் உள்ளூர் வர்த்தக நடவடிக்கையில் தமிழ் வணிகர் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர் எனலாம்.

வடபகுதியில் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட காலத்திலும் மேற்கொள்ளப்பட்டதற்கு ஆதாரமாக சோழர்கால ஆதாரங்கள் விளங்குகின்றன. சோழர் காலத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட சோழ வணிக கணத்தினர் வெளிநாட்டவராக விளங்கினாலும் அவர்களே உள்ளூர் வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவந்ததை அறியமுடிகின்றது. இவ் வணிக கணத்தினருள் பல்வேறு பிரிவினர்கள் காணப்பட்டாலும் அவர்களுள் நானாதேசிகர்கள் மற்றும் ஐநூற்றுவர் ஆகியோரது நடவடிக்கைகள் வடபகுதியில் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. இவர்களுள் நானாதேசிகரது நடவடிக்கை வடபகுதியின் பூனகரிப்பகுதியில் இடம் பெற்றிருப்பதை பதவியாவிலுள்ள 1ஆம் இராஜராஜனது கல்வெட்டு மூலம் அறியமுடிகின்றது. ஐநூற்றுவரது நடவடிக்கைகள் வடபகுதியில் இடம் பெற்றிருப்பதை யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியிலுள்ள இடம் ஐநூற்றுவன் வளவு என அழைக்கப்படுவதன் மூலம் அறியமுடிகின்றது(சிற்றம்பலம், 1993,ப,487.).

வடபகுதியில் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பது தொடர்பாக வட பகுதியையும் தென்பகுதியையும் இணைக்கும்வகையில் அமைக்கப்பட்டிருந்த பாதைகள் மூலம் அறியமுடிகின்றது. இந்தவகையில் புராதன காலம் முதல் மாதோட்டத்திலிருந்து அநுராதபுரத்திற்கும், ஜம்புகோளப்பட்டணத்திலிருந்து அநுராதபுரத்திற்கும் பாதைகள் அமைக்கப்பட்டிருந்தமை தொடர்பான கருத்துக்கள் மூலம் அறிய முடிகின்றது. இதனை உறுதிப்படுத்துவதாக கோகில சந்தேசய எனும் சிங்கள இலக்கியம் தகவல் வழங்குவது குறிப்பிடத்தக்கது. இவ் விலக்கியம் தெவுந்தர, மாத்தறை, பாணந்துறை, கொழும்பு, வத்தளை, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் மன்னார் ஊடாக யாழ்ப்பாணம் வரை பாதை அமைக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடுகின்றது(Sriweera,2002,p.p133-134.). இவ்வாறு இவ் விலக்கியம் குறிப்பிடும் பாதை அமைப்பினூடாக வட பகுதி புராதன காலம் முதல் தென்பகுதியுடன் தரைவழியூடாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்ததைக் காணமுடிகின்றது.

வடபகுதியில் புராதன காலம் முதல் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவந்ததுபோல் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததைக் காணமுடிகின்றது. இந்தவகையில் இவ் வர்த்தக நடவடிக்கைகள் வடபகுதியில் காணப்பட்ட ஆரம்பகால புகழ்பெற்ற துறைமுகங்களான மாந்தை, ஜம்புகோளத்துறை ஆகியவற்றுடன் வல்லிபுரம், பூனகரி, ஊர்காவற்துறை, அல்லைப்பிட்டி ஆகியவற்றினூடாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ் வெளிநாட்டு வர்த்தகத்தில் இந்தியா, கிரேக்க, உரோமநாடுகளும் பிற்பட்ட காலத்தில் அராபியர், சீனர் ஆகியோரும் ஈடுபட்டு வந்தனர். இவ் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கை ஆரம்பகாலங்களில் தென்னிந்தியா ஊடாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. அதாவது ஆரம்பகாலங்களில் தென்னிந்திய வர்த்தகர்கள் இலங்கைத் துறைகளுக்கு வருகைதந்து வர்த்தகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தென்னிந்தியத் துறைகளுக்குக் கொண்டு சென்று அங்கிருந்தே கிரேக்க உரோமர்களுக்கு

விற்பனை செய்து வந்தனர்(சிற்றம்பலம், 1993,ப,473.). தென்னிந்தியத் துறைகளுக்கு வருகைதரும் கிரேக்க உரோமர்களும் இலங்கைத் துறைகளுகளுக்கு நேரடியாக வருகைதராது அங்கிருந்தே தமக்குத் தேவையான இலங்கையின் வர்த்தகப் பொருட்களைக் கொள்வனவு செய்து வந்தனர். இதனால் தென்னிந்தியர்களே ஆரம்பகால வெளிநாட்டு வர்த்தகத்தில் செல்வாக்குப் பெற்றுத்திகழ்ந்தனர். ஆனால் பிற்பட்ட காலத்தில் கிரேக்க உரோமர் முதலிய வெளிநாட்டவர் நேரடியாகவே இலங்கையுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். இவ் வெளிநாட்டு வர்த்தகத்தில் வடபகுதியின் இயற்கை வளங்களான முத்து மற்றும் யானை ஆகியன முக்கிய இடம் பெற்றிருந்தன.

வடபகுதியில் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் புராதன காலம் முதல் மேற்கொள்ளப்பட்டுவந்ததை வட பகுதியின் ஆரம்பகாலக் குடியிருப்பு மையங்களாக விளங்கிய கந்தரோடை, வேலணை, பூனகரி, நெடுந்தீவு, யாழ்ப்பாணக் கோட்டைப்பகுதி போன்ற பகுதிகளில் கிடைக்கப்பட்ட ரோமன் ரௌலட் மட்பாண்ட சிதைவுகளும் கிரேக்க உரோம நாணயங்களும் உறுதிப்படுத்தியுள்ளன. இச் சான்றுகளின் அடிப்படையில் வட பகுதியில் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய காலம் முதலே இடம் பெற்று வந்ததைக் காண முடிகின்றது. இவ்வர்த்தக நடவடிக்கைகள் கி.பி 4ஆம், 5ஆம் நூற்றாண்டுகள் வரை தொடர்ந்திருந்ததை இவர்களது நாணயங்கள் மூலம் அறியமுடிகின்றது. இவ்வாறான நாணயங்கள் வடபகுதியின் கந்தரோடை, வல்லிபுரம், மண்ணித்தலை, வெட்டுக்காடு, திருக்கேதீஸ்வரம் ஆகிய பகுதிகளிலிருந்து பெறப்பட்டிருப்பது இதனை உறுதிப்படுத்துகின்றது(சிற்றம்பலம், 1993,ப,500.). வடபகுதியுடன் புராதன காலம்முதல் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த கிரேக்க உரோமரது செல்வாக்கு கி.பி 6ஆம் நூற்றாண்டு தொடக்கம் குறைவடைய இப்பகுதிகளில் இந்தியர், அரேபியர், சீனர் ஆகியோரது வர்த்தக நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கின.

வட பகுதியின் வர்த்தக நடவடிக்கையில் புராதனகாலம் முதல் தென்னிந்தியர் ஈடுபட்டமை தொடர்பாக கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட பாண்டியர்கால நாணயங்கள் மூலம் அறியமுடிகின்றது. இந்நாணயங்கள் கி.மு 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இனங்காணப்பட்டுள்ளன. இந்தவகையில் வட பகுதியுடனனான தென்னிந்தியாவின் வர்த்தகத் தொடர்பும் மிகவும் தொன்மையானதெனக் கூறலாம். இவ்வாறான வர்த்தகத்தொடர்பு தொடர்ந்தும் பேணப்பட்டிருப்பதை பூனகரிப் பகுதியிலுள்ள கல்முனை, வெட்டுக்காடு, ஈழவூர் ஆகிய பகுதிகளில் கிடைத்த கி.பி 10ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த பாண்டியரது நாணயங்கள் மூலம் அறியமுடிகின்றது(சிற்றம்பலம்,1993,ப,501). இதேபோல் பல்லவர்கால நாணயங்கள் கந்தரோடையிலும் திருக்கேதீஸ்வரப் பகுதியிலும் கிடைத்திருப்பது இக்காலப்பகுதியிலும் புராதன காலம் முதல் தென்னிந்தியர் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதைக் உறுதிப்படுத்துகின்றது. இவர்களை அடுத்து சோழர்காலத்தில் தென்னிந்தியர் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்ததை காணமுடிகின்றது. சோழர் காலத்தில் வடபகுதியின் துறைமுகங்களான மாந்தை மற்றும் ஊர்காவற்துறை ஆகியவை வெளிநாட்டு வர்த்தகத்தின் பொருட்டு புகழ்பெற்றுத் திகழ்ந்தன. இவற்றுள் மாந்தைத் துறைமுகத்தில் சோழ வணிககணங்களது வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றிருப்பதை இங்கு கிடைத்துள்ள 1ஆம் இராஜேந்திரன் காலக் கல்வெட்டு மூலம் அறியமுடிகின்றது. இதுபோல் சோழ வணிககணத்தினரது வர்த்தக நடவடிக்கைகள் ஊர்காவற்துறைத் துறைமுகப் பகுதிகளில் இடம் பெற்றிருப்பதை இதன் அருகிலுள்ள ஊரான நாரந்தனைப் பகுதியில் 1951 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற 1ஆம் இராஜராஜன் காலத் தங்கநாணயம் மூலம் அறியமுடிகின்றது. இது போல் வடபகுதியில் உள்ள தீவுகள், குடாநாட்டுப்பகுதிகள், வன்னிப்பகுதிகள் ஆகியவற்றில் கிடைத்துவரும் சோழர்கால நாணயங்கள் இவர்களது வர்த்தக நடவடிக்கைகள் இக்காலத்தில் அதிகரித்திருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. சோழராட்சியை தொடர்ந்து வடபகுதியில் பிற்பட்டகாலங்களில் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கையில் ஊர்காவற்துறை துறைமுகம் முக்கிய இடம் பெற்றுத் திகழ்ந்தது. இதன் காரணமாகவே 1ஆம் பராக்கிரமபாகு இத்துறைமுகத்தினூடாக இடம்பெற்ற வர்த்தகத்தை தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கும் பொருட்டு கல்வெட்டு வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியரை அடுத்து வடபகுதியில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டவர்களாக அராபியர் மற்றும் சீனர் ஆகியோர் விளங்குகின்றனர். இவர்களுள் அராபியரது நடவடிக்கைகள் வடபகுதியில் இடம் பெற்றது தொடர்பாக இக்காலத்தில் இலங்கைக்கு வருகைதந்த அராபியர்களான அபுசாயிக், மஸ்ஊடி, எல்எதிரிசி, எல்கஸ்வானி போன்றோரது குறிப்புக்கள் மூலம் அறியமுடிகின்றது. இவர்கள் தமது குறிப்புக்களில் யாழ்ப்பாணம் தொடர்பாகவும் இங்கு இடம்பெற்ற வர்த்தக நடவடிக்கை தொடர்பாகவும் குறிப்பிட்டிருப்பதன் மூலம் அக்காலத்தில் இடம் பெற்ற வர்த்தக நடவடிக்கை தொடர்பாக அறியமுடிகின்றது. இதேவேளை அண்மையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள கட்டுக்கரைக் குளப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின்போது அராபிய மட்பாண்டங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளமையானது இப்பகுதியில் அராபியரது வர்த்தக நடவடிக்கை இடம்பெற்றிருப்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. ஆராபியரை போன்று சீனர்களும் வடபகுதியில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதைக் காணமுடிகின்றது. இவர்களது வர்த்தக நடவடிக்கைகள் மாந்தை மற்றும் அல்லைப்பிட்டிப் பகுதியில் அதிகரித்திருந்தது. இதனை உறுதிப்படுத்துவதாக இப்பகுதிகளில் கிடைக்கப்பட்ட சீன மட்பாண்டங்களும், சீன நாணயங்களும் விளங்குகின்றன. வடபகுதியில் சீனரது வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றதை உறுதிப்படுத்துவதாக இலண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜோன் காஸ்வெல் என்பவர் 1970 ஆம் அண்டு மாந்தை மற்றும் அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட ஆய்வுகளின் போது கிடைக்கப்பட்ட சீன மட்பாண்டங்கள் சான்றாக அமைகின்றது. இவ்வகை மட்பாண்டங்கள் கி.பி 12ஆம் மற்றும் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக அடையாளங்காணப்பட்டுள்ளன(சிற்றம்பலம்,1993,ப.ப,490-491). இந்தவகையில் பிற்பட்ட காலத்தில் சீனரது வர்த்தக நடவடிக்கை இப்பகுதிகளில் அதிகரித்திருந்ததைக் காணமுடிகின்றது. இவ்வாறாக வடபகுதியில் கிரேக்க, உரோமர், தென்னிந்தியர், அராபியர், சீனர் ஆகியோர் புராதன காலம் தொட்டு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்ததைக் காணமுடிகின்றது.

**யாழ்ப்பாண அரசுகால வர்த்தகம்**

கி.பி 13 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றிருந்த யாழ்ப்பாண அரசானது கி.பி 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வீழ்ச்சியடையும்வரை எழுச்சிபெற்றுத்திகழ்வதற்கு அதன் பொருளாதார வளங்களும் ஓர் காரணமாகத் திகழ்ந்தது. குறிப்பாக யாழ்ப்பாண அரசர்கள் இப்பகுதியின் இயற்கை வளங்கள், உற்பத்திகள், சமூகவழமைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சிறந்த பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து யாழ்ப்பாண அரசின் பொருளாதாரம் சிறந்தநிலையை அடைவதற்கான வழியை ஏற்படுத்தியிருந்தனர். இவ்வாறான இவர்களது பொருளாதார நிலையில் இக்காலத்தில் முன்னெடுத்துவந்த வர்த்தகமானது முக்கிய இடம் பெற்றுத்திகழ்ந்தது. இதன் மூலமாக அரசு பெருமளவு வருமானத்தையும் பெற்றுவந்தது. இவ் வர்த்தக நடவடிக்கையில் அரசானது இராச்சியத்தில் காணப்பட்ட இயற்கைவளங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கையை அரசின் ஏகபோக உரிமைபெற்ற தொழில் என்ற கொள்கையின் அடிப்படையில் மேற்கொண்டு வந்தமை இவ்வரசின் பொருளாதாரக் கொள்கையின் சிறப்பை பறைசாற்றுகின்றது. இக்கால வர்த்தகமானது உள்நாட்டிற்குள்ளும், வெளிநாடுகளுடனும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவ் வர்த்தக நடவடிக்கைகள் தரைவழியாக கடவைகள் மற்றும் வடபகுதித் துறைமுகங்களான மாதோட்டம், அரிப்பு, மன்னார், கச்சாய், கொழும்புத்துறை, பருத்தித்துறை, காங்கேசன்துறை, ஊர்காவற்துறை ஆகியவற்றினூடாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்தன(பத்மநாதன்,2011,ப,157). இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கையின் போது கடவைகள் மற்றும் துறைமுகங்கள் ஆகியவற்றில் அரசு சுங்கச்சாவடிகளை நிறுவி சுங்கவரிகளை அறவிட்டு வந்தது. இதன் மூலம் பொருளாதாரரீதியாக அரசிற்கு குறிப்பிட்டளவு வருமானம் கிடைத்துவந்தது குறிப்பிடத்தக்கது.

### உள்நாட்டு வர்த்தகம்

யாழ்ப்பாண இராச்சியத்தில் விளைந்த உற்பத்திப் பொருட்கள் அப்பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வந்ததுடன் பிறதேசங்களுக்கும் அவை விற்பனை செய்யப்பட்டு வந்தன. இந்தவகையில் இக்காலத்தில் உள்நாட்டு வர்த்தகமானது கண்டி இராச்சியத்துடனும், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களுடனும் இடம்பெற்று வந்ததைக் காணமுடிகின்றது. குறிப்பாக இவ்வர்த்தகத்தின் பொருட்டு கிழக்கிலங்கையிலிருந்து நெல், அரிசி ஆகியவற்றை யாழ்ப்பாணத் துறைமுகங்களுக்குக் கடல் மார்க்கமாக வணிகர்கள் ஏற்றிவந்தனர். இதேவேளை கண்டிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே வர்த்தக நடவடிக்கைகள் தினமும் இடம் பெற்று வந்ததைக் காண முடிகின்றது. இவ்வர்த்தக நடவடிக்கையின்போது கண்டி இராச்சியத்தில் விளைந்த மிளகு, பாக்கு, மஞ்சள், இஞ்சி, கராம்பு, அரிசி, நெல் ஆகியவை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டது(பத்மநாதன்,2011,ப,156). இக்காலத்தில் கண்டி இராச்சியத்திற்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கையானது யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்த துறைமுகங்களூடாக மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றதை அறியமுடிகின்றது. இவ் வர்த்தக நடவடிக்கையானது தரைவழியாகவும், கடல்வழியாகவும் முன்னெடுக்கப்பட்டு வந்தது. வன்னியின் பூனகரிப் பகுதியானது குடாநாட்டிற்கு அண்மையில் காணப்பட்டதனால் அப்பகுதியூடாக வன்னிப் பகுதியை சென்றடைவது இலகுவாக இருந்ததனால் கொழும்புத்துறையூடாக கடல்மார்க்கமாகப் போக்குவரத்து இடம்பெற்றுவந்தது. இதனால் கொழும்புத்துறை வன்னியுடனான வர்த்தகத்தின் பொருட்டு முக்கியம்வாய்ந்த துறைமுகமாக இக்காலத்தில் எழுச்சிகண்டிருந்தது. இதனால் இத்துறைமுகப்பகுதியில் அரசு சுங்கச்சாவடியை நிறுவி சுங்கவரியை அறவிட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக முன்னெடுக்கப்பட்டுவந்த உள்நாட்டு வர்த்தகத்தின் மூலம் யாழ்ப்பாண அரசின் பொருளாதாரம் சிறந்த நிலையை அடைந்துவந்ததெனக் கூறலாம்.

### வெளிநாட்டு வர்த்தகம்

யாழ்ப்பாண அரசு இக்காலத்தில் தென்னிந்தியா, சீனா, யாவா, பாரசீகம், கிரேக்க உரோம நாடுகள் ஆகியவற்றுடன் வர்த்தக உறவைப் பேணியிருந்தது. இந்நாடுகளுடன் இடம்பெற்ற வர்த்தக நடவடிக்கையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னார்க் கடலில் இருந்து பெறப்பட்ட முத்து, சங்கு, வன்னிப்பகுதியில் இருந்து பிடிக்கப்பட்ட யானைகள், சாயம், தென்பகுதியில் உற்பத்தியாகிய கறுவா, வடபகுதியின் வளமான பனை உற்பத்தி மற்றும் சில உள்ளூர் உற்பத்திகளான எண்ணைவகை மற்றும் தெங்கு உற்பத்தியகள் ஆகியவை இடம்பிடித்திருந்தன. இவற்றுள் முத்து, யானை, சாயம் ஆகியவை முக்கியம் வாய்ந்த வர்த்தகப் பொருட்களாக விளங்கியிருந்ததுடன் அவற்றின் மூலம் அரசு பெருமளவான வருமானத்தைப் பெற்றுவந்தது. இதனால் அரசு இவ் வர்த்தக நடவடிக்கையை தனது ஏகபோக உரிமைபெற்ற தொழிலாக மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது(பத்மநாதன்,2011,ப.ப,150-157.).

யாழ்ப்பாண அரசு காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த நாடுகள் வரிசையில் தென்னிந்தியா முக்கிய இடம் பெற்றுத்திகழ்ந்தது. இவ்வர்த்தக உறவு புராதன காலம் தொட்டு இடம்பெற்று வந்த வர்த்தக உறவின் தொடர்ச்சியாகவே திகழந்தது. இந்தவகையில் இக்காலத்தில் தென்னிந்தியாவின் பாண்டிய அரசு, நாயக்க அரசு, பாமினி அரசு ஆகியவற்றுடன் வர்த்தக நடவடிக்கைகளை பெருமளவில் மேற்கொண்டிருந்தது. இத்தென்னிந்திய அரசுகளுடனான வர்த்தக நடவடிக்கைகள் மலையாளம், சோழமண்டலக்கரை ஆகியவற்றினூடாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. இத்தென்னிந்தியப் பகுதிகளுடன் மேற்கொள்ளப்பட்டுவந்த வர்த்தக

நடவடிக்கைகள் மூலம் அங்கிருந்து அரிசி முதலிய உணவுப் பொருட்களும், மென்மையான புடவைகள், பொன், வெள்ளி, வெண்கலம், செம்பு, இரும்பு, முதலிய பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு இறக்குமதியாகின. அதுபோல் யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்து யானை, முத்து, சங்கு, சாயம், கறுவா, பனை உற்பத்திகளான பனங்கட்டி, கற்காரம், பனை ஓலைப்பாய், கடகம், எண்ணை வகைகளான வேப்பெண்ணை, இலுப்பை எண்ணை, தேங்காய் எண்ணை ஆகியவையும், தென்னை உற்பத்திகளான தேங்காய், கயிறு ஆகியவை இப்பகுதிகளுக்கு ஏற்றுமதியாகின(பத்மநாதன்,1992,ப.ப,126-127).

இக்காலத்தில் தென்னிந்தியாவின் கயல் பட்டணம் வர்த்தகத்தின் பொருட்டு சிறந்த பட்டணமாக விளங்கியது. இப்பட்டணத்திலே மன்னார் முத்துக்கள் விற்பனையாகிவந்தன. இப்பட்டணம் இக்காலத்தில் சர்வதேச வர்த்தக நிலையமாகத் திகழ்ந்தது. இங்கு வருகைதந்த வெளிநாட்டு வர்த்தகர்கள் தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்து தமது நாடுகளில் விற்பனைசெய்து வந்தனர். யாழ்ப்பாண அரசின் மன்னார் முத்துக்கள் இப்பட்டணத்தில் விற்பனையாகியதால் இதனூடாக யாழ்ப்பாண அரசு சர்வதேச வர்த்தகத் தொடர்பைப் பேணிவந்தது. இதற்கு ஆதாரமாக வெனிசிய நாட்டறிஞர் மார்க்கோபோலோ குறிப்பிடும் தகவல் ஆதாரமாக விளங்குகின்றது(பத்மநாதன்,1992,ப.126). இவர் கயல் பட்டணத்திற்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்ட முத்துக்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்றதாகக் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் யாழ்ப்பாண அரசு காலத்தில் தென்னிந்தியாவுடனான வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பாக இருந்ததுடன் தென்னிந்தியா ஊடாக பிறநாடுகளுடன் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்ததைக் காணமுடிகின்றது.

யாழ்ப்பாண அரசுகாலத்தில் தென்னிந்தியா ஊடான பிறநாடுகளுடனான வர்த்தக நடவடிக்கை இடம்பெற்று வந்த அதேவேளை நேரடியாகவும் வர்த்தக நடவடிக்கை இடம்பெற்று வந்ததைக் காணமுடிகின்றது. இதற்கு ஆதாரமாக வெளிநாட்டுப் பயணியான இபன் பதூதாவின் குறிப்புக்கள் காணப்படுவது சுட்டிக்காட்டத்தக்கது. இவரது தகவலின் ஊடாக நோக்கும்போது இபன் பதூதா இலங்கைக்கு வருகைதந்த சமயம் ஆரியச்சக்கரவர்த்தி வலிமைமிக்கவனாக விளங்கினான் எனவும் இவன் நூற்றுக்கணக்கான நவாய்களை வைத்திருந்து வர்த்தகத்தின் பொருட்டு அவற்றைப் பயன்படுத்திவந்தான் எனவும் குறிப்பிடுகின்றார். இவ்வாறான நூற்றுக்கணக்கான நவாய்கள் ஒருநாள் ஆராபிய நாடான யெமன் நோக்கிப் பயணித்ததைத் தான் கண்டதாகக் குறிப்பிடுகின்றார்(பத்மநாதன்,1992,ப,110). இவருடைய குறிப்பின் மூலம் ஆரியச்சக்கரவர்த்திகள் மத்தியகிழக்கு நாடுகள்வரை தங்களது வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்தியிருந்ததை அறியமுடிகின்றது. இதற்கு ஓர் காரணம் இக்காலப் பகுதியில் மேலைத்தேசத்திற்கும், கீழைத்தேசத்திற்குமிடையிலான வர்த்தக நடவடிக்கையில் அராபியர்களும், பாரசீகர்களும் செல்வாக்குப் பெற்றுத்திகழ்ந்தனர். இப்பின்னணியிலேயே ஆரியச்சக்கரவர்த்திகள் மத்தியகிழக்கு நாடுகளுடன் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கையின் பொருட்டு நேரடியான தொடர்புகளைப் பேணிவந்தனர். இத் தொடர்பின் காரணமாக யாழ்ப்பாண அரசில் பாரசீகரது செல்வாக்கு அதிகரித்திருப்பதையும் காணமுடிகின்றது. இது தொடர்பாக இபன் பதூதா தகவல் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவர் தான் பட்டாள நகரில் சந்தித்த ஆரியச்சக்கரவர்த்தி பாரசீக மொழியில் தேர்ச்சி பெற்றிருந்ததாகக் குறிப்பிட்டிருப்பது இதற்குச் சிறந்த ஆதராமாக விளங்குகின்றது.

யாழ்ப்பாண அரசு இராச்சியத்தில் காணப்பட்ட வளங்களான முத்து, யானை, சாயம் ஆகியவற்றை விற்பனை செய்தமை மூலம் பெருமளவு வருமானத்தை பெற்றுவந்த அதேவேளை தென்னிலங்கையின் வளமான கறுவாவை விற்பனை செய்தமை மூலமும் வருமானத்தைப் பெற்றுவந்தது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் சர்வதேச வர்த்தகத்தில் இடம்பெற்ற வாசனைச் சரக்குகளில் கறுவா பிரதான இடத்தைப் பெற்றிருந்தது. இது உணவுகளைச் சுவையூட்டுவதற்கும், மருந்துகளைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனால் கறுவாவிற்கு மிகப்பெரிய கேள்வி இருந்துவந்தது. அதிலும் இலங்கையில் உற்பத்தியாகிய கறுவா தரம்மிக்கதாகக் கொள்ளப்பட்டது. இவை அராபியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு

வந்தது. யாழ்ப்பாண அரசு கி.பி 14 ஆம் நூற்றாண்டில் வலிமை வாய்ந்ததாக எழுச்சியடைந்து இருந்ததனால் யாழ்ப்பாண அரசர்கள் தமது மேலாதிக்கத்தை தென்னிலங்கை மீது ஏற்படுத்தியதன் மூலம் கறுவா வர்த்தகத்தை தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்து மேற்கொண்டு வந்தனர். இவ்வர்த்தகம் தொடர்பாக இபன் பதூதா தகவல் வழங்குவதும் குறிப்பிடத்தக்கது. இவர் தனது குறிப்பில் குறிப்பிடும்போது யாழ்ப்பாண அரசின் கட்டுப்பாட்டில் இருந்த துறைமுகங்கள் ஒன்றினூடாக கறுவா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த தெனவும் ஏற்றுமதிக்காக கரையோரப் பகுதிகளில் கறுவாவினை குன்றங்கள் போல் அடுக்கியிருந்தனர் எனவும் குறிப்பிடுகின்றார். மேலும் இவ்வாறு காணப்பட்ட கறுவாவினை மலையாளம், தமிழகம் ஆகிய பகுதிகளில் இருந்து வருகின்ற வணிகர்கள் துணிகள் முதலானவற்றை ஆரியச்சக்கரவர்த்திகளிடம் கொடுத்துவிட்டு கறுவாவினை ஏற்றிச்சென்றதாகக் குறிப்பிடுகின்றாா(பத்மநாதன்,1992,ப,127). இவ்வாறாக தென்னிலங்கையில் உற்பத்தியாகிய கறுவாவினை தென்னிலங்கையில் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்தியமை மூலம் பெற்று விற்பனை செய்தமை மூலம் வருமானத்தைப் பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசின் ஏகபோக உரிமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவந்த வர்த்தக நடவடிக்கை

யாழ்ப்பாண அரசு காலத்தில் இராச்சியத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்பட்ட இயற்கை வளங்கள் அரச உடமையாகக் காணப்பட்டதன் அடிப்படையில் அவ் இயற்கைவளங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வந்த வர்த்தக நடவடிக்கைகள் அரசின் ஏகபோக உரிமையின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவந்தன. யாழ்ப்பாண இராச்சியத்தைப் பொறுத்தவரை அதன் இயற்கை வளங்களாக கடல், காடு ஆகியவை காணப்பட்டன. இவற்றிலிருந்து கிடைக்கும் பெறுமதியான பொருள்கள் வரிசையில் காட்டிலிருந்து சாயவேர், யானைகள், பெறுமதியான மரங்கள் ஆகியவையும் கடலிலிருந்து பெறப்படும் முத்து, சிப்பி,சங்கு, உப்பு ஆகியவையும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகமும் அரசின் கீழே மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவற்றுள் முத்து, யானை, சாயம் ஆகியவை முக்கியமான வர்த்தகப்பொருட்களாக விளங்கியிருந்தன. இவற்றை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகத்தின் மூலம் அரசு பெரும் வருவாயையும் பெற்றுவந்தது குறிப்பிடத்தக்கது.

## முத்து வர்த்தகம்

யாழ்ப்பாண இராச்சியத்தை பொறுத்தவரை கடல் வளத்திலிருந்து கிடைத்த வளங்களில் முக்கியம்வாய்ந்ததாக முத்துக்கள் திகழ்ந்தன. யாழ்ப்பாண அரசர் காலத்தில் இடம்பெற்றுவந்த முத்து வர்த்தகத்திற்கான முத்துக்கள் மன்னார்க் கடலில் இருந்தே பெறப்பட்டு வந்தன(குலசபாநாதன்,1949,ப,35. இம் முத்துக்கள் சர்வதேச வர்த்தகத்தில் முக்கிய இடம் பெற்றிருந்ததுடன் இவ் வர்த்தகத்தின் மூலம் ஆரியச்சக்கரவர்த்திகள் பெருமளவு வருமானத்தையும் பெற்றுவந்தனர். இதனால் முத்துவர்த்தகமானது அரசின் ஏகபோக உரிமைபெற்ற வர்த்தகமாக இக்காலத்தில் காணப்பட்டது. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக்கு வருகைதந்த ஜோர்தான்ஸ் எனும் வெனீசிய நாட்டைச்சேர்ந்த பாதிரியார் 8000 படகுகள் மன்னார்க் கடலிலே முத்துக்குளிப்பில் ஈடுபட்டதாகக் குறிப்பிடுகின்றார். இவுன்பதுதா எனும் யாத்திரிகன் இலங்கைக்கு வருகைதந்த சமயத்தில் ஆரியச்சக்கரவர்த்தி ஒருவன் முத்துச்சலாபத்திற்கு சமீபமாக தங்கியிருந்து அதனை மேற்பார்வை செய்துவந்ததாக குறிப்பிட்டுள்ளார்(பத்மநாதன்,2011,ப,154). அக்காலத்தில் மன்னார்க் குடாவில் இருந்து பெறப்பட்ட முத்துக்கள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்துவந்த வணிகர்களால் வாங்கிச்செல்லப்பட்டது.

முத்துக்குளிப்பானது சித்திரை, வைகாசி, ஆகிய மாதங்களில் நடைபெற்றுவந்தது. அக்காலங்களில் அரசன் அப்பகுதியின் பாதுகாப்பை பலப்படுத்திவைப்பதுடன் முத்துக்குளிப்போர், வியாபாரிகள், அரசஅதிகாரிகள் ஆகியோர் அப்பகுதிகளில் தங்கியிருந்து தமது நடவடிக்கைகளை

மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் செய்துவந்தான். முத்துக்குளிப்பின்போது பெறப்பட்ட முத்துக்களில் அரைப்பங்கு அரசனுக்குரியதாகும் மிகுதியை தோணிகளில் செல்வோர் தமக்கிடையே பகிர்ந்துகொள்வர். அவர்கள் தமது முத்துக்களை வணிகர்களுக்கு விற்பனை செய்துவிட்டு தமக்குத்தேவையான உணவுப்பொருட்களையும், புடவைகளையும் பெற்றுக்கொள்வர். முத்துக்குளிப்புக் காலத்திலே மாதோட்டத்தில் சனப்புழக்கமும், பண்டமாற்றும் கணிசமான அளவில் ஏற்படுவருவது குறிப்பிடத்தக்கது. முத்துக்களை கொள்வனவு செய்யும் வணிகர்கள் அவற்றை தென்னிந்தியத் துறைமுகப் பட்டணங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனைசெய்து வந்தனர்(பத்மநாதன்,2011,ப,156). முத்துக்குளிப்புடன் தொடர்பான சந்தைகளில் விற்பனையாகிய பொருள்கள் மீதும் அரசு வரி அறவிட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண இராச்சியத்தில் கடலில் இருந்து பெறப்பட்ட முத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட் வர்த்தகம் தவிர மீன்பிடி, கருவாடு பதனிடல், சங்கு பிடித்தல், உப்பு உற்பத்திசெய்தல் ஆகிய பல தொழில்கள் மூலமும் வருமானம் பெறப்பட்டு வந்தது(முத்துத்தம்பிப்பிள்ளை,1915). இத் தொழில்களை யாழ்ப்பாண இராச்சியத்தின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்துவந்த மக்கள் மேற்கொண்டுவந்ததுடன் இவர்கள் யாழ்ப்பாண சமூகத்தில் இருந்த சாதிக்கட்டமைப்பில் தனிப்பிரிவினராகக் கணிக்கப்பட்டு வந்தனர். யாழ்ப்பாண இராச்சியத்தில் உற்பத்தியான உப்பிற்கு பெருவரவேற்பு கிடைத்திருந்தமை தொடர்பாக யாழ்ப்பாண வைபவமாலை பல தகவல்களை தெரிவிப்பது குறிப்பிடத்தக்கது(குலசபாநாதன்,1949). இவ்வாறு கடல் தொழிலில் ஈடுபட்டுவந்த மக்கள் கடலுக்குச் சென்று பெற்றுவந்த கடல் திரவியங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் பொருளாதார வளத்திற்கு உறுதுணையாக விளங்கிவந்தது குறிப்பிடத்தக்கது.

**யானை வர்த்தகம்**

யாழ்ப்பாண அரசர் காலத்தில் அரசுக்கு வருமானம் கிடைக்கும் மற்றொரு இயற்கை வளமாகக் காடுகளில் இருந்து பிடிக்கப்படும் யானைகள், பெறுமதிவாய்ந்த மரங்கள் ஆகியவை விளங்கின. இயற்கை வளமான காடுகள் அரச உடமைகளாகக் காணப்பட்டதனால் காட்டிலிருந்து பெறப்படும் யானை மற்றும் மரங்கள் விற்பனை அரசின் ஏகபோக உரிமைபெற்றவையாகக் காணப்பட்டன. யாழ்ப்பாண இராச்சியத்தைப் பொறுத்தவரை வன்னிப்பகுதியில் யானைகள் பெருமளவில் காணப்பட்டதனால் வன்னிப்பற்றுக்களை ஆட்சிபுரிந்த ஆட்சியாளர்கள் அங்குள்ள யானைகளைப் பிடித்து அரசருக்குத் திறையாகக் கொடுத்துவந்தனர்(இராசநாயகம், 1933). வன்னிப்பகுதியிலிருந்து குடாநாட்டிற்கு யானைகளைக் கொண்டுவரும் பகுதியே ஆனையிறவு என்ற பெயரால் வழங்கிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வன்னியிலிருந்து கொண்டுவரப்பட்ட யானைகளை யாழ்ப்பாண அரசர்கள் தமது அரசியல் தேவைகளுக்கு பயன்படுத்திவந்ததுடன் தென்இந்தியாவிற்கும் ஏற்றுமதி செய்துவந்தனர். அவ் யானைகளை விஜயநகரத்து ராய்கள், தில்லி சுல்தான்கள், வங்காளத்து நவாபுகள், பாமினி சுல்தான்கள், ஆகியோர் கொள்வனவு செய்து வந்தனர். சோழமண்டலக் கரையிலிருந்தும் வங்காளத்திலிருந்தும் வருகைதரும் வணிகர்கள் யானைகளைக் கொள்வனவு செய்து சென்றனர். அவர்கள் யாழ்ப்பாணம் வரும்போது நெல், அரிசி, ஆகியவற்றை கப்பல்களில் ஏற்றிவந்து வழங்கும் முறையைப் பின்பற்றிவந்தனர்(பத்மநாதன், 2011,ப.152.).

**சாயவேர் மற்றும் சாய உற்பத்தி**

யாழ்ப்பாண அரசர் காலத்தில் சாயவேர் உற்பத்தி ஏற்றுமதிப் பொருளாகக் காணப்பட்டதுடன் அரசின் ஏகபோக உரிமை பெற்ற தொழிலாகவும் காணப்பட்டது. இக்காலத்தில் சாயவேர் பெருமளவில் தென்னிந்தியாவிற்கு ஏற்றுமதியாகி வந்தமை குறிப்பிடத்தக்கது. சாயவேருடன்

சம்மந்தப்பட்ட சாயம் காச்சுதல் குடிசைக்கைத்தொழிலாக அக்காலத்தில் விருத்திபெற்றிருந்தது. சாயவேர் உற்பத்தியானது யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் காரைதீவு முதலான தீவுகளிலும் மன்னாரிலும் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுவந்தது. சாயவேரை சேகரிப்பதற்கென அரசு ஊழியர்களை நியமித்திருந்ததுடன் அவர்களைக்கொண்டு அதனைக் காய்ச்சிப் பதப்படுத்தி சாயக்கட்டிகளாக விற்பனை செய்துவந்தனர். இச்சாயக்கட்டிகள் பச்சை, சிவப்பு, நீலநிறங்களில் காணப்பட்டதுடன் அவை துணிகளுக்கு சாயமூட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன(பத்மநாதன்,ப,150).

**முடிவுரை**

யாழ்ப்பாண அரசு கி.பி 13 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்று கி.பி 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வீழ்ச்சியடையும்வரை ஏறத்தாள நான்கு நூற்றாண்டுகள் நிலைத்து நின்றதுடன் அக்காலப்பகுதியில் எழுச்சிமிக்க அரசாகத்திகழ அதன் பொருளாதார நிலை ஓர் காரணமாகத் திகழ்ந்தது. இப் பொருளாதார நிலை சிறப்பாகவும் வலிமையாகவும் அமைவதற்கு மன்னர்கள் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகளும் இங்கு இடம்பெற்ற வர்த்தக நடவடிக்கைகளும் முக்கிய காரணமாக அமைந்தன. குறிப்பாக மன்னர்கள் இராச்சியத்தின் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்டுவந்த வர்த்தக நடவடிக்கையை அரசின் ஏகபோக உரிமை அடிப்படையில் மேற்கொண்டு வந்தமை மூலம் அரசிற்கு அதிகளவில் பெருமளவில் வருமானம் கிடைக்க வழியமைத்துக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இது அவர்களது பொருளாதாரக் கொள்கையின் சிறப்பைப் பறைசாற்றுகின்றது. இதேவேளை யாழ்ப்பாண அரசில் உற்பத்தியாகிய ஏனைய வர்த்தகப் பொருட்களை விற்பனை செய்தமை மூலமும் அரசிற்கு வருமானம் கிடைக்க வழிவகுத்திருந்தனர். இவ்வாறான வர்த்தக நடவடிக்கைகள் உள்நாட்டிற்குள்ளும் வெளிநாடுகளுடனும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவற்றுள் உள்நாட்டு வர்த்தகம் தரைவழியூடாகவும், வெளிநாட்டு வர்த்தகம் வடபகுதித் துறைமுகங்களூடாக கடல்வழியாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட வர்த்தக நடவடிக்கையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் வடபகுதி உற்பத்திகள் ஏற்றுமதியாகியதுடன் வடபகுதிக்குத் தேவையான உற்பத்திகள் அந்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வந்த வர்த்தக நடவடிக்கையின் மூலம் அரசு சிறந்த வருமானத்தைப் பெற்றுவந்ததுடன் யாழ்ப்பாண அரசு பொருளாதாரரீதியாக எழுச்சிமிக்க அரசாக விளங்கக் காரணமானது குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்**

1. இந்திரபாலா, க.(2006).*இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு.* கொழும்பு-சென்னை: குமரன்புத்தக இல்லம்.
2. இராசநாயகம்,செ.(1933).*யாழ்ப்பாணச் சரித்திரம்.* யாழ்ப்பாணம்:
3. இந்திரபாலா,கா.(1972).*யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்.* வட்டுக்கோட்டை, இலங்கை: யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகம்.
4. குணசிங்கம்,மு.(2008).*இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு.* ஆஸ்திரேலியா: எம்.வி. வெளியீடு.
5. சபாநாதன்,கு.(1949).*யாழ்ப்பாண வைபவமாலை.*சுன்னாகம்: திருமகள் அச்சகம்.
6. சிற்றம்பலம்,சி.க.(1992).*யாழ்ப்பாண இராச்சியம்.*திருநெல்வேலி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.
7. பத்மநாதன், சி.(2011).*யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்க வரலாறு.*கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
8. பத்மநாதன், சி.(2001). *இலங்கைத் தமிழர் தேசவளமைகளும் சமூகவழமைகளும்.*கொழும்பு- சென்னை: குமரன் பதிப்பகம்.
9. புஷ்பரட்ணம்,ப.(2017). *இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு.* தமிழ்க் கல்விச் சேவை, சுவிற்சர்லாந்து.
10. Sriweera,W.I.(2002), *History of Sri Lanka from earliest times upto the sixteenth century*, Dayawansa Jayakody & company , Colombo.
11. Pathmanathan,S.(1978). *The Kingdom of Jaffna*. Colombo.

12. Gueyroz,Fernao De.*The temporal and spiritual conquest of Ceylon*, Translated by Fr.S.G.Prerera, (1930): Colombo.